திரு ஆ. தங்கவேல்: இதோ முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முடிக்கிறதல்ல பிரச்சினை. விஷயம் விசாரணையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்னதன் பேரில் கேள்வி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

திரு ஆ. தங்கவேல்: ஆணையர் அவர்களும் இதிலே ஈடுபட்டிருப்பதாக அங்கே நடக்கின்ற விசாரணையிலிருந்து தெரிவதால்; அந்த ஆணையர் அவர்களை வைத்துக் கொண்டு விசாரணை நடத்தினல் உண்மை தெரியாது. அவர்களை சஸ்பெண்ட் செய்தோ அல்லது வேறு ஊருக்கு மாற்றியோ, சென்னையிலிருந்து ஒரு பெரிய புலன் விசாரணை அதிகாரியை அனுப்பி விசாரித்தால் உண்மை தெரியும். ஆகவே, இந்த அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே, விசாரணை முடிந்த பின்புதான் யார் யார் குற்றவாளிகள் என்று தெரிந்து அந்த அடிப்படையில் தான் யார் யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்ல முடியும். ஆகவே, அதற்கு முன்னதாகவே அவரை மாற்றுவது இவரை மாற்றுவது என்பது முடியாத காரியம்.

6. அரசின் தீர்மானங்கள்.

(1) சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"1975–76-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவைப் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:—

1. திரு. எஸ். டி. ஆதித்தன்
2. திரு. வே. தங்கப்பாண்டியன்
3. திரு. எஸ். எஸ். தென்னரசு
4. திரு. கே. ராஜாராம்
5. திரு. என். சுந்தரேசத் தேவர்".

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"1975–76-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவைப் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

1. திரு. எஸ். டி. ஆதித்தன்
2. திரு. வே. தங்கப்பாண்டியன்
3. திரு. எஸ். எஸ். தென்னரசு
4. திரு. கே. ராஜாராம்
5. திரு. என். சுந்தரேசத் தேவர்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"1975–76-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:

1. திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்
2. திரு. இரா. சாம்பசிவம்
3. திரு. ஆ. தங்கவேல்
4. திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்
5. திரு. எம். எம். பக்கர்".

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

"1975–76-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.—

1. திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்
2. திரு. இரா. சாம்பசிவம்
3. திரு. ஆ. தங்கவேல்
4. திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்
5. திரு. எம். எம். பக்கர்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.